பாலியல் வன்முறை வீடியோ வெளியான விவகாரத்தில் நீதி கிடைக்கவில்லை !

பெண் நீதிபதிக்கு பதவி உயர்வு வழங்கக்கூடாது:

குடியரசுத் தலைவர், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதிக்கு பாதிக்கப்பட்ட மலையாள நடிகை கடிதம்!

திருவனந்தபுரம், ஏப்.25-

நீதிமன்றத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த பலாத்கார வீடியோ வெளியான விவகாரத்தில் நீதிபதி ஹனி எம். வர்கீசுக்கு பதவி உயர்வு வழங்கக்கூடாது என்று பாதிக்கப்பட்ட மலையாள நடிகை ஜனாதிபதி, உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி ஆகியோருக்கு கடிதம் அனுப்பியுள்ளார். கடந்த 2017ம் ஆண்டு பிப்ரவரி 17ம் தேதி பிரபல மலையாள நடிகை ஒருவர் படப்பிடிப்புக்காக திருச்சூரில் இருந்து கொச்சிக்கு காரில் சென்று கொண்டிருந்தபோது ஒரு கும்பலால் கொடூரமாக பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டார்.

இந்த சம்பவம் தொடர்பாக வழக்கு பதிவு செய்த கொச்சி போலீசார் பாதிக்கப்பட்ட நடிகையின் முன்னாள் கார் டிரைவரான பல்சர் சுனில்குமார் உள்பட 6 பேரை கைது செய்தனர். மேலும் பலாத்காரத்திற்கு சதித்திட்டம் தீட்டியதாக பிரபல மலையாள முன்னணி நடிகர் திலீப் உள்பட மேலும் 4 பேர் இந்த வழக்கில் கைது செய்யப்பட்டனர். இந்தக் கும்பலைச் சேர்ந்தவர்கள் நடிகையை பலாத்காரம் செய்தபோது அதை செல்போனில் வீடியோ எடுத்தனர்.

போலீசாரின் தீவிர விசாரணையில் இந்தக் கும்பல் பலாத்கார காட்சிகளை ஒரு மெமரி கார்டில் பதிவு செய்து வைத்திருந்தது தெரியவந்தது. அந்த மெமரி கார்டை பின்னர் பல்சர் சுனில்குமாரின் வக்கீலிடமிருந்து போலீசார் கைப்பற்றினர். பின்னர் மெமரி கார்டை போலீசார் விசாரணை நீதிமன்றத்தில் ஒப்படைத்தனர். சிபிஐ சிறப்பு நீதிமன்ற நீதிபதியாக இருந்த ஹனி எம். வர்கீஸ் இந்த வழக்கில் சிறப்பு நீதிபதியாக நியமிக்கப்பட்டார்.

இந்நிலையில் நீதி மன்றத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த மெமரி கார்டு திறந்து பார்க்கப்பட்டுள்ளது என்றும், இது தொடர்பாக வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பாதிக்கப்பட்ட நடிகை எர்ணாகுளம் நீதிமன்றத்தில் ஒரு மனு தாக்கல் செய்தார். இந்த சம்பவத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. ஆனால் இந்த வழக்கில் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கடந்த வருடம் டிசம்பர் 8ம் தேதி இந்த வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டது.

பல்சர் சுனில்குமார் உள்பட முதல் 6 குற்றவாளிகளுக்கு 20 வருடம் கடுங்காவல் சிறையும், அபராதமும் விதிக்க ப்பட்டது.நடிகர் திலீப் உள்பட 4 பேரும் இந்த வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டனர். இந்த வழக்கில் தீர்ப்பு வழங்கிய நீதிபதி ஹனி எம். வர்கீஸ் உள்பட 5 முதன்மை நீதிபதிகளை கேரள உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமிக்க உயர்நீதிமன்ற கொலீஜியம் ஜனாதிபதிக்கு சிபாரிசு செய்திருந்தது.

இது தற்போது ஜனாதிபதியின் பரிசீலனையில் உள்ளது. நீதிபதி ஹனி எம். வர்கீசுக்கு பதவி உயர்வு வழங்கக்கூடாது என்று ஜனாதிபதி, உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி, ஒன்றிய உள்துறை, சட்டத்துறை அமைச்சர் மற்றும் கேரள உயர்நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு பாதிக்கப்பட்ட நடிகை கடிதம் அனுப்பியுள்ளார். அதில் கூறியிருப்பது: நீதிமன்றத்தில் பாதுகாப்பாக இருந்த மெமரி கார்டை யாரோ திறந்து பார்த்துள்ளனர்.

நீதிமன்றத்தில் பாதுகாப்பாக இருந்த மெமரி கார்டை திறந்து பார்த்தது அதிர்ச்சியளிக்கிறது. இந்த விவகாரத்தில் நீதிபதி ஹனி எம். வர்கீசுக்கும் தொடர்பு இருப்பதாக சந்தேகம் உள்ளது. இதுவரை இந்த வழக்கில் எனக்கு நீதி கிடைக்கவில்லை. எனவே ஹனி எம். வர்கீசுக்கு பதவி உயர்வு வழங்கக் கூடாது.

இவ்வாறு கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அதிக இடங்களில்-

தி.மு.க. வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும்!

கம்யூனிஸ்ட் தலைவர்கள் டி.ராஜா - பெ.சண்முகம் பேட்டி!

சென்னை, ஏப். 25-

தி.மு.க. கூட்டணி அதிக இடங்களில் வெற்றிபெற்று ஆட்சியை அமைக்கும் என, சென்னையில் வாக்கு செலுத்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.





தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதையொட்டி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய பொதுச் செயலாளர் டி.ராஜா, தி.நகர், தக்கர் பாபா வித்யாலயா பள்ளியிலும், மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன் வியாசர்பாடி மூர்த்தி நகரில் உள்ள நடுநிலைப் பள்ளியிலும் தங்களது வாக்குகளைச் செலுத்தினர். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் ஆவடி மாநகராட்சியில் உள்ள கோயில்பதாகை தொடக்கப் பள்ளியில் தனது வாக்கை செலுத்தினார்.

பின்னர், செய்தியாளர்களிடம் அவர்கள் கூறியதாவது:

டி.ராஜா: நமது ஜனநாயகத்தை வலுப்படுத்த வாக்கு செலுத்துவது என்பது ஒரு முக்கியமான உரிமையாகும். இந்த தேர்தலில் தி.மு.க. தலைமையிலான கூட்டணி வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும். அதேபோல், மேற்கு வங்கத்திலும் பா.ஜ.க. தோற்கடிக்கப்பட வேண்டும். தமிழகம் பா.ஜ.க.வின் பேரழிவு தரும் சித்தாந்தத்துக்கு எதிராக போராடுவதைப் போலவே, வங்காள மக்களும் பா.ஜ.க.வை எதிர்த்துப் போராடி தோற்கடிக்க வேண்டும்.

பெ.சண்முகம்: மக்கள் நீண்ட வரிசைகளில் நின்று, ஆர்வத்துடன் வாக்களித்துள்ளனர். நம்மை யார் ஆள வேண்டும் என்பதை தீர்மானிக்கக் கூடியது இந்த தேர்தல். திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி, அதிகமான இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியை அமைக்கும். இதற்கான அறிகுறிகள் தமிழ்நாடு முழுவதும் தென்படுகிறது.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தென்காசி மாவட்டம் பாவூர்சத்திரம் பகுதிகளிலிருந்து

பா.ஜ.க. - அ.தி.மு.க. - த.வெ.க.கட்சியினர் 100 பேர் கழகத்தில் இணைந்தனர்!

கழக வேட்பாளர் மரு.கலை கதிரவன் – பொ.சிவபத்மநாதன் முன்னிலையில்!

தென்காசி.ஏப்.25-

திராவிட மாடல் முதலமைச்சர். கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் நல்லாட்சி மீண்டும் தொடர தென்காசி தெற்கு மாவட்டம் தென்காசி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பாவூர்சத்திரம் சுற்று வட்டாரப் பகுதியைச் சேர்ந்த பா.ஜ.க. அ.தி.மு.க. மற்றும் த.வெ.க. ஆகிய கட்சிகளில் இருந்து விலகி தென்காசி சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் மரு.கலை கதிரவனுக்கு முழு ஆதரவை தெரிவிக்கும் அடிப்படையில் தென்காசி தெற்கு மாவட்ட அலுவலகம் கலைஞர் அறிவாலயத்தில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், தென்காசி தொகுதி கழக வெற்றி வேட்பாளர் மரு.கலை கதிரவன் தென்காசி தெற்கு மாவட்ட முன்னாள் செயலாளர் பொ.சிவ பத்மநாதன் ஆகியோர் முன்னிலையில் தாமாக முன்வந்து கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

உ.பி.யில் 4 வயது சிறுமி பாலியல் வன்கொடுமையில் பலி!

சிறப்பு புலனாய்வுக்குழு விசாரிக்க வேண்டும்!

உச்சநீதி மன்றம் உத்தரவு!

லக்னோ, ஏப். 25-

பாஜக ஆளும் உத்தரப் பிரதேசத்தில் 4 வயது சிறுமி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு உயிரிழந்த சம்பவத்தில், சிறப்பு புலனாய்வுக்குழு விசாரணைக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

உத்தரப்பிரதேச மாநிலம் காசியாபாத்தில் கடந்த மாதம் 4 வயது சிறுமி பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டு பின்னர் உரிய சிகிச்சை கிடைக்காமல் உயிரிழந்தார். இந்த வழக்கில் உரிய விசாரணை நடத்தப்படவில்லை என்று உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. காசியாபாத் காவல்துறை கண்காணிப்பாளர் உள்ளிட்டோர் கடந்தவாரம் உச்ச நீதிமன்றத்தில் ஆஜராகி விளக்கமளித்தனர். அதன்பிறகும், விசாரணைகள் சரியாக நடக்கவில்லை என்றும் குற்றவாளிகளைக் காப்பாற்ற முரண்பாடான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் மனுதாரர் தரப்பில் குற்றம் சாட்டப்பட்டது. இதைத்தொடர்ந்து, சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கில் சிறப்பு புலனாய்வு குழுவை அமைத்து விசாரணை நடத்த உத்தரபிரதேச மாநில டிஜிபிக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பெண் ஐ.ஜி. தலைமையில் நாளைக்குள் சிறப்பு புலனாய்வுக்குழு அமைக்க வேண்டும் என்று ஆணையிட்டுள்ளது. அனைத்து விசாரணை அதிகாரிகளும் பெண் அதிகாரிகளாக இருக்க வேண்டும் என்றும் விசாரணையை இரண்டு வாரங்களில் முடித்து உச்ச நீதிமன்றத்தில் அறிக்கை அளிக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

குற்றவாளிகளைக் காப்பாற்ற முரண்பாடான ஆவணங்கள் தயாரிப்பு என மனுதாரர் குற்றம் சாட்டியுள்ளனர். சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கில் சிறப்பு புலனாய்வு குழுவை அமைத்து விசாரணை நடத்தவேண்டும் எனலாம் பாதிக்கப்பட்டவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரான் நாட்டுக்குப் பயணிக்க வேண்டாம்!

இந்தியர்களுக்கு – ஒன்றிய அரசு அறிவுறுத்தல்!

புதுடெல்லி, ஏப். 25-

ஈரான் தலைநகர் தெஹ்ரானிலுள்ள இந்தியத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், ஈரானில் நிலவி வரும் பதற்றங்கள் காரணமாக ஏற்பட்டுள்ள வான் வெளி கட்டுப்பாடுகள் மற்றும் செயல்பாடுகளின் உறுதியற்ற நிலையால், ஈரானில் இருந்து புறப்படும் மற்றும் அந்நாட்டுக்கு வருகை தரும் சர்வதேச விமானங்களின் சேவைகள் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியா மற்றும் ஈரான் இடையே சில விமானங்கள் இயக்கப்படுவதாக வெளியான தகவல்களின் அடிப்படையில், இந்தியக் குடிமக்கள் வான்வழியாகவோ அல்லது தரைவழியாகவோ ஈரானுக்குப் பயணம் மேற்கொள்ள வேண்டாம் என அறிவுறுத்தப்படுவதாகவும், ஈரானில் உள்ள இந்தியர்கள் குறிப்பிட்ட நில எல்லைகளின் வழியாக உடனடியாக அந்நாட்டை விட்டு வெளியேறுமாறு அந்த அறிக்கையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் தலைமையில் அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே நடைபெற்ற முதற்கட்ட அமைதிப் பேச்சுவார்த்தை தோல்வி அடைந்தது. இதையடுத்து, ஈரானிய துறைமுகங்களை அமெரிக்க கடற்படை முற்றுகையிட்டு வருகின்றது. இதனால், ஹோர்முஸ் நீரிணையை ஈரான் படைகள் மீண்டும் முடக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

முனைவர் ம.இராசேந்திரன் வரவேற்புரை! ப.சிதம்பரம் எம்.பி. தலைமையுரை!

‘தமிழியல் கலைக் களஞ்சியம்’ வெளியீட்டு விழா!

முனைவர் ம.திருமலை நூலை வெளியிட – சு.வெங்கடேசன் எம்.பி. பெறுகிறார்!

மதுரை, ஏப்.25 -

தமிழ் வளர்ச்சிக் கழகம் சார்பில் ‘தமிழியல் கலைக்களஞ்சியம்’ வெளியீட்டு விழா இன்று (25.4.2026) மாலை 5.00 மணியளவில் கலைஞர் நூற்றாண்டு நூலகம், மதுரையில் நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் முனைவர் ம.இராசேந்தி ரன் வரவேற்புரையாற்றுகிறார்.

தமிழ் வளர்ச்சிக் கழக அறங்காவலர் குழுத் தலைவர் ப.சிதம்பரம் எம்.பி. தலைமையுரையாற்றுகிறார்.

தமிழ்ப் பல்கலைக் கழக மேனாள் துணைவேந்தர் முனைவர் ம.திருமலை நூலை வெளியிடுகிறார்.

சு.வெங்கடேசன் எம்.பி. நூலை பெற்றுக் கொள்கிறார்.

தமிழ் வளர்ச்சிக் கழக பொருளாளர் பேராசிரியர் சா.சரவணன் நன்றி கூறுகிறார்.

இவ்விழாவில் தமிழ் வளர்ச்சிக் கழக அறங்காவலர் குழு, ஆட்சிக் குழு, பொதுக் குழு உறுப்பினர்கள் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

மேற்கு வங்கத்தில் 91.83 சதவிகித வாக்குகள் பதிவு!

கொல்கத்தா, ஏப்.25-

மேற்கு வங்க மாநிலத்தில் 152 தொகுதிகளுக்கான முதற்கட்ட வாக்குப்பதிவு நேற்று முன்தினம் காலை 7 மணிக்கு வாங்குப்பதிவு தொடங்கியது. ஆனால், வாக்களிக்க மக்கள் ஆர்வாக முன்னதாக திரண்டனர். இதனால் வாக்குப்பதிவு சதவீதம் அதிகரித்த வண்ணம் இருந்தது.

இந்த நிலையில் மாலை 6 மணியுடன் வாக்குப்பதிவு நிறைவடைந்தது. 6 மணிக்கும் வாக்குச்சாவடிகளுக்கு வந்த வாக்காளர்களுக்கு டோக்கன் வழங்கப்பட்டு வாக்களிக்க அனுமதிக்கப்பட்டனர். மாலை 5 மணி வரை சுமார் 90 சதவீத வாக்குகள் பதிவாகி இருந்த நிலையில், 6 மணி நிலவரப்படி 91.83 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன.



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026யை யொட்டி, திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சட்டமன்றத் தொகுதி திருத்தணி நகரம் ஆலமரதெருவில் உள்ள திருத்தணி ஊராட்சி ஒன்றிய நடுநிலை பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி மையத்தில் திருவள்ளூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் தனது வாக்கினை குடும்பத்தினருடன் வருகை புரிந்து வாக்கு செலுத்தினர்.

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி காங்கிரஸ் கட்சி வேட்பாளர் எஸ்.மாங்குடி காரைக்குடி மகரிஷி மேல்நிலைப் பள்ளியில் தனது வாக்கினை பதிவு செய்தார்.

சேலம் – வாக்குச் சாவடியில் தேர்தல் பணியில் ஈடுபட்டிருந்த

தி.மு.க. தொண்டர் மாரியப்பன் மறைவு! அதிர்ச்சியில் அவரது தாயாரும் மறைவு!

அமைச்சர் ராஜேந்திரன் அஞ்சலி! மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் ரூ.5 லட்சம் உதவி!

சேலம், ஏப். 25-

சேலம் வாக்குச்சாவடியில் தேர்தல் பணியில் ஈடுபட்டு இருந்த தி.மு.க. தொண்டர் நேற்று முன்தினம் மாரடைப்பால் இறந்த நிலையில் அவரது மறைவின் சோகத்தை தாங்க முடியாது அவரது தாயாரும் உயிர் இழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

உயிர் இழந்தவரின் உடலுக்கு அஞ்சலி செலுத்திய அமைச்சர் ராஜேந்திரன் அவரது குடும்பத்திற்கு மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் 5 லட்சம் நிதியுதவி வழங்கினார்.

சேலம் மேற்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தாரமங்கலம் அருகே, அத்திக்காட்டானூர் வாக்குச்சாவடியில் நேற்று முன்தினம் தேர்தல் பணியில் ஈடுபட்டிருந்த தி.மு.க. தொண்டர் மாரியப்பன் வாக்குச்சாவடியில் திடீரென மயங்கி விழுந்து மாரடைப்பால் மரணம் அடைந்தார்.

இவரது மரணம் குறித்து தகவல் அறிந்த சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளரும் சுற்றுலாத்துறை அமைச்சருமான ராஜேந்திரன், உயிரிழந்த மாரியப்பன் உடலுக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

இந்த நிலையில் நேற்று காலை தி.மு.க. தொண்டர் மாரியப்பனின் தாயார் பழனியம்மாள் மகன் இறந்த அதிர்ச்சியில் இறந்துள்ளார்.

தி.மு.க. தொண்டர் மற்றும் அவரது தாய் இறந்தது அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

இந்த நிலையில் இது குறித்து தகவல் அறிந்த சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளரும் சுற்றுலாத்துறை அமைச்சருமான ராஜேந்திரன் உடனடியாக நேரில் சென்று உயிரிழந்த பழனியம்மாளின் உடலுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய தோடு, தேர்தல் பணியில் ஈடுபட்டு உயிரிழந்த தி.மு.க. தொண்டர் மாரியப்பனின் குடும்பத்திற்கு உதவும் வகையில் அவரது மனைவி ராதாவிடம் மத்திய மாவட்ட திமுக சார்பில் 5 லட்ச ரூபாய் நிதி உதவி வழங்கி ஆறுதல் தெரிவித்தார்.

அமைச்சருடன் தாரமங்கலம் கிழக்கு ஒன்றிய செயலாளர் கிருஷ்ண மூர்த்தி உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் பலரும் உடன் இருந்தனர்.